தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 17-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கேரள வேளாண் பல்கலை உயர்நிலைக்குழு கோவை வேளாண் பல்கலைக்கு வருகை

திருச்சூரில் உள்ள கேரள அரசின் வேளாண் பல்கலைக்கழகத்தில் உயர்நிலைக்குழு, கேரள சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.பி. வின்செண்ட் தலைமையில் கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்து இங்கு நடைபெறும் முக்கிய ஆய்வுத்திட்டங்களைப் பற்றி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்களிடம் கேட்டறிந்தனர்.

கேரள வேளாண் பல்கலைக்கழகமானது, மூன்று பேர் அடங்கிய உயர்நிலைக் குழுவினை சட்டமன்ற உறுப்பினர் திரு. M.P. வின்செண்ட் தலைமையில், கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு ஆய்வு மையங்களுக்கு சென்று, ஆய்வு பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தார்.

குறிப்பாக நானோ தொழில்நுட்பம், இயற்கை வழி வேளாண்மை, மின் ஊடகங்கள் வழியாக வேளாண் விரிவாக்கம், அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் உயிர்நுட்ப துறைகளுக்கு சென்று அங்குள்ள பேராசிரியர்களிடமும், மாணவர்களிடமும் அங்கு நடைபெற்று வரும் முக்கிய ஆய்வுகளை கேட்டறிந்தனர்.

அதுபற்றி கேரள வேளாண் பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி முனைவர். ந. அஜீத்குமார் அவர்கள் கூறும்போது நாட்டின் முன்னனி பல்கலைக்கழகமான தமிழ்நாடு வேளாண் பல்கலையில் உள்ள ஆய்வுத் திட்டங்களை கேட்டறிந்து தங்கள் பல்கலைக்கழகத்திற்கு கொண்டு சேர்க்கவே இப்பயணம் என்று கூறினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்